13 OCT 20..
Eastern University, Sri

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE & MANAGEMENT
## (EXTERNAL DEGREE PROGRAM)
## PART – III EXAMINATION IN BBA/ B. COM – 1998/ 99 (MARCH 2005)
## BBA/ COM 402 DEVELOPMENT AND PLANNING

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இரண்டு வினாக்களுக்கு குறையாமல் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

நேரம்: 03 மணி

## பகுதி– I

01. a. அபிவிருத்தி என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

b. வறிய நாடுகளில் அபிவிருத்தியின் குறிக்கோள்கள் யாவை?

(08 புள்ளிகள் )

c. "மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது அபிவிருத்தியின் சில பொருளாதார ரீதியிலான அம்சங்களை மாத்திரம் காட்டுகின்ற ஒரு குறிகாட்டியாக விளங்குகின்றது" ஆராய்க.

(08 புள்ளிகள்)

02. a. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைந்தமட்ட வாழ்வு நிலைக்கான காரணங்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

b. "விருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பு, கல்வி மற்றும் சமுக நிறுவனங்களின் அமைப்பு என்பன அவற்றின் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களினாலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன" விளக்குக.

(12 புள்ளிகள்)

03. a. றொஸ்டோவின் வளர்ச்சிக் கோட்பாட்டின் பொருளாதார வளர்ச்சிக் கட்டங்களை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

b. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் விடுபடுகட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

(08 புள்ளிகள்)

04. a. ஆர்தர் லூயிஸினால் விளக்கப்பட்ட வரையுறையற்ற ஊழிய நிரம்பல் தொடர்பான மாதிரியை விளக்குக.

(12 புள்ளிகள்)

b. இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்தியுடன் எந்தளவுக்கு மேற்கூறிய மாதிரி தொடர்புபட்டது? விளக்குக.

(08 புள்ளிகள்)

## பகுதி– II

a. பொருளாதாரத் திட்டமிடலின் தன்மையை விளக்குக.

(08 புள்ளிகள்)

b. வெவ்வேறுபட்ட பொருளாதார முறைமைகளில் அதன் வெவ்வேறுபட்ட பங்குப் பணியினை (role) விளக்குக .

(12 புள்ளிகள்)

"அபிவிருத்திக்கான ஒரு கருவியாக திட்டமிடலை ஏற்றுக்கொள்வதானது பல்வேறு அடிப்படை வாதங்களில் (arguments) தங்கியுள்ளது" ஆராய்க.

(20 புள்ளிகள்)

"அபிவிருத்தித்திட்டங்களானவை சில முறைசார்ந்த பேரினப்பொருளியல் மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டவை" பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக.

a. மொத்த வளர்ச்சி மாதிரி.

b. துறைசார் செயற்திட்ட மாதிரி.

(20 புள்ளிகள்)

a. "ஒரு அபிவிருத்திதிட்டமானது பொருளாதார ரீதியில் சிறந்ததாக அமைவதானது கிடைக்கும் புள்ளிவிபரத் தரவுகளின் தரம் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றில் தங்கியுள்ளது" ஆராய்க.

(12 புள்ளிகள்)

b. அரசியல் தலைவர்களிடையே மனவுறுதியில்லாமையானது திட்டமிடலின் தோல்விக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது? விளக்குக.

(08 புள்ளிகள்)